கண்ணம்மா

கண்ணம்மாவின் மீது 'சின்னக் காற்றுக்கூடப் படப் படாது அவள் பாட்டிக்கு. "குழந்தை! குறுக்கும் நெடுக்கு மாக ஏன் அலைகிறாய்?" என்பாள். கண்ணம்மா சொன்ன தைக் கேட்க மாட்டாள். தெருவில் போய் நிற்பாள்.

அவளுக்குக் கண்ணிருந்தால், கட்டிலடங்கக் கூடிய வயதா? ஆனால், கண்ணில்லாவிட்டால் மட்டும் சேஷ்டை கள் போய்விடுமா? எனவே, தெருப்புறம் போய், நின்று நின்று, வண்டி ஓசைகளைக் கொண்டும், காலடிகளைக் கொண்டும், ஜனங்களின் பேச்சுக்களைக் கொண்டும், பக்ஷிகளின் சப்த ஜாலங்களைக் கொண்டும், பழய ஞாபங் களைக் கொண்டும், உலகத்தை அகக் கண்ணுக்குமுன் உருவகப்படுத்தி, இன்புற்று நேரத்தைப் போக்காமல் வேறு என்ன செய்ய முடியும்?

குழந்தை பொட்டை என்ற அவமானத்தால் பாட்டி அலையக்கூடாதென்று உத்திரவிடுவதாக நினைக்கக் கூடாது. உண்மையில் யாரேனும் வீட்டிற்குள் வந்துபோகும் பொழுது விஷயம் தெரியாமல் அவளை ஒரு வேளை இடித் துத் தள்ளிவிடப் போகிறார்களே என்ற பயம், கவலை. ஆனால் அவ்வளவு பயத்திற்கு இடமில்லை யென்பது கிழவிக்குத் தெரியாததல்ல. அவள் நிற்குமிடத்திற்குப் பத்தடிக் கப்பால் எவ்வளவு பூனைமாதிரி நடந்து வந்தாலும், அவளுக்கு எப்படியோ தெரிந்துபோகும். நண்டு விரைவில் நகர்ந்து வளையில் புகுவதைப் போல் ஓரமாய் நகர்ந்து விடு

வாள். ஒரு வேளை வேறு ஞாபகமாய் நின்று விட்டால், கிட்டத்தில் வந்த நிமிஷத்தில் அவள் விருக்கென்று நகர் வதைப் பார்க்க வேண்டுமே!

வழக்கம்போல் அன்றும் வாசல் நிலை இருபுறத்தையும் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு ஒற்றைக் காலை முன் னும் பின்னுமாய் ஆட்டிக் கொண்டிருந்தாள் கண்ணம்மா. அவளுடைய பாட்டி தெருவிலிருந்து வீட்டுப் படி ஏறு முன்னமேயே தனக்கென்ன கொண்டு வந்திருக்கிறாள் என்று கேட்டாள். பாட்டி மறுமொழி சொல்லாமல் தன் மடியி ருந்த கொய்யாக் காயை அவளிடம் கொடுத்தாள்.

வீட்டுக் கூடத்தில் கண்ணம்மாவின் தம்பி சோமு உட்கார்ந்திருந்தான். கொய்யாக் காயைப் பார்த்தவுடன் தனக்கில்லையா என்றான். பாட்டி ஒன்றுதான் கொண்டு வந்தேனென்றாள்.

"கண்ணம்மா! எனக்குப் பாதி தாயேன்."

"நான் மாட்டேன்."

சோமு ஒரு மாதிரியான பையன். பாட்டி பக்கம் திரும் பினான். "உனக்கு வயசாகியும் புத்தி இல்லை. சொன்னால் கோபம் வரும்."

"நான் என்ன செய்யட்டும்?"

"இரண்டு குழந்தைகள் இருக்கிற இடத்தில், ஒரு கொய்யாக் காய் கலகம் பண்ணும் என்று தெரிய வேண் டாம்?"

"நான் சமைக்கற வீட்டில் எனக்குக் கொடுத்தார்கள். கொண்டு வந்தேன். வாசலில் அவள் நின்றுகொண்டிருந் தாள். கொடுத்துவிட்டேன். உன் ஞாபகம் வரவில்லை"

"ஆமாம். எப்பொழுதுமே கண்ணம்மாதான் உனக்கு ஒஸ்தி. இப்பொழுது எங்கம்மா இருந்தால் தெரியும்!"

"போதுமே. உன் அசட்டு வாயை மூடு," என்று ஓங்கிப் பேசினுள் பாட்டி.

சோமு அடங்கி விட்டான்.

இந்தக் கொய்யாக்காய் விவகாரத்திற்குப் பின் வினே வில்லாமல் போகவில்லே. தனக்கு இல்லாமல் போனதற்குக் காரணம் தன் தமக்கைதானே! அவளோடு 'டு' விட்டு விட்டான். கண்ணம்மா லேசுப்பட்டவளா? பாட்டியின் செய்கைக்கு அவள் எப்படிப் பொறுப்பு? தவிர, அவ்வளவு நல்லவளான பாட்டியைக்கூடக் கோபம் மூட்டும்படியாகப் பேசுபவனேடு சேரப் படாதல்லவா?

அது முதல் மூன்று நாள் வரையில் ஒருவர் நிற்குமிடத்தில் மற்றவர் நிற்பதில்லே. ஆனுல் மற்றவரை எப்படிப் படிய வைக்கலாம் என்பதே இருவருக்கும் யோசனே.

மூன்ரும் நாள் சோமு அழுதுகொண்டே வீட்டிற்கு வந்து சேர்ந்தான். பாட்டி வீட்டிலிருந்தாள்.

"ஏண்டா குழந்தே அழுகிருய்?"

அவன் உடன் பதில் சொல்லவில்லே. ஏனென்ருல் இந்த மாதிரி வாரத்திற்கு நான்கு சந்தர்ப்பங்கள் வீதம் வந்து கொண்டிருந்தால் கொஞ்சம் அவமானமாக இருக்காதா?

சோமு என்னவோ, வஞ்சனேயின்றி, சோம்பலின்றிப் படித்துத்தான் வந்தான். அதிகாலேயிலும், இரவிலும் அவன் கட்டுக்கட்டாய் விபூதியைப் பூசிக்கொண்டு "தெள்ளிய ஆலின் சிறு பழத்தொருவிதை" முதலிய பாடங்களே உச்சஸ்தாயியில் நெட்டுருப் பண்ணுவது தெருவையே அதிரடிக்கும். இருந்தாலும், அவனுடைய வாத்தியார் வையாத நாளே கிடையாது. படிக்கும்பொழுது நன்ருய் உருவாகும்,—வகுப்பில் வந்தால் ஒப்பிக்க முடிவதில்லே! அவனென்ன செய்வான்? அடியை வாங்கிக்கொண்டு சிவனே என்று, பெஞ்சிமேல் நின்று தீர்ப்பான்.

அன்று அடிவாங்கிய ஒரு சந்தர்ப்பம். இனிப் பள்ளிக் கூடம் போகப் போவதில்லையென்று பாட்டியிடம் சொல்லி விடுவதாக நிச்சயப்படுத்திக் கொண்டே வீடு வந்து சேர்ந் தான்.

பாட்டி "ஏண்டா குழந்தே அழறே?" என்றபொழுது பதில் சொல்லுவோ மென்றால் கண்ணம்மா வேறு அங்கே நின்று கொண்டிருந்தாள். கடைசியாக அவ்வளவு அவமா னத்தையும் சகித்துக்கொண்டு அழுகையுடன் சேர்த்துச் சொன்னான் :

"இன்று பாடம் ஒப்பிக்கவில்லை என்று சார் அடிச்சார் இனிமேல் என்னைக் களிமண் என்றுதான் கூப்பிடுவேன் என்றார். நான் பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வரும்போது பையன்களெல்லாம் கூட என்னை 'ஏ களிமண்' என்று கூப் பிடுகிறான்கள்."

மீன்கொத்தியைப் போல் 'லபக்'கென்று அந்தப் பேச் சைப் பிடித்துக் கொண்டாள் கண்ணம்மா.

"நிஜந்தானே! மடாத் தவளை போல் தினம் உருப் போட்டு என்ன புண்யம்? வீட்டு ஒட்டடை உதிர்ந்ததுதான் மிச்சம். நான் ஒரு தரமோ இரண்டு தரமோ படிக்கக் கேட் டிருக்கிறேன். இதோ சொல்கிறேன் கேள்."

இப்படிச் சொல்லிவிட்டு "கஜானனம் பூதகணாதி ஸேவி தம்" என்று ஆரம்பித்து மூச்சுவிடாமல் ஐந்து நிமிஷம் வரையில் அவன் பாடத்தை யெல்லாம் ஒப்புவித்தாள்.

"இப்பொழுது சொல்லுடா, உன்னைக் களிமண் என்று சொல்லாமல் யாரைச் சொல்கிறது...? உனக்கு பதிலாக நானே இனிமேல் பள்ளிக்கூடம் போக வேண்டியதுதான்!"

சோமுவின் அவமானம் ஆத்திரமாய் வெளிப்பட்டது. "இவ்வளவு மூளை இருக்கிறதென்றுதான் கடவுள் கண்ணை அவித்திருக்கிறது."

"ரொம்ப பேஷ்! நீதான்டா நாளைக்கு இந்தப் பொட்டையைக் காப்பாத்தப் போகிறாய்! இந்த அழகான பேச்சைக் கேட்க உன் தாயார் இருக்கவேண்டும்," என்று பாட்டி குறுக்கிட்டதும் சோமு ஓய்ந்து விட்டான்.

இப்பொழுது கண்ணம்மா அவமானப்பட்டுப் போய் விட்டாள். கண்ணில்லாக் குறையைக் குத்திக்காட்டினால் அவள் துடிதுடிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

"இருக்கட்டும்டா களிமண்!" என்று பதிலுக்கு வைது கூடப் பார்த்துவிட்டாள். மனது நேராகவில்லை.

"இந்தக் களிமண்தான் உனக்குச் சோறு போட்டுக் காப்பாத்த வேண்டும். பார்த்துக்கொள்!" என்று சௌரியம் பேசினான் சோமு.

பாட்டி மறுபடியும் குறுக்கிட்டு, பையனை கூடத்துப் பக்கமாயும், பேத்தியைச் சமையலறைப் பக்கமாயும் தள்ளி விட்டாள்.

பாட்டி செத்துவிட்டால் நம்பாடு என்ன என்ற எண்ணம் பாணம்போல் கண்ணம்மாவைத் தொளைக்க ஆரம்பித்து விட்டது. பாவி சோமுவின் உதவியை எப்படி எதிர்பார்க்க முடியும்? எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இவ்வெண்ணங்களின் மத்தியில் அவனுக்கு எப்படியேனும் புத்தி சொல்லித் தரவேண்டுமென்ற நோக்கமொன்றும் பதைத்துக் கொண்டிருந்தது.

சோமுவுக்கோ, கண்ணம்மாவை முற்றிலும் முறியடிப்பதற்குள் பாட்டி குறுக்கிட்டு விட்டாளே என்ற குறை. இருவரும் வஞ்சம் தீர்க்க சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வாரம் கழித்து அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று சனிக்கிழமை. எங்கெங்கோ, சுற்றிவிட்டு மத்தியானம் ஒரு மணிக்கு அவன் வீட்டுக்கு வந்தபொழுது

கண்ணம்மா தெருத்திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். சோமுவின் கையிலிருந்த சாமான் அவனுக்கு அளவற்ற குதூகலத்தைத் தந்து கொண்டிருந்தது. இவள் முட்டாள், கண்ணற்றவள், உன் உதவியின்றி வாழமுடியாதவள் என்பதை நன்ருய் ருசுப்பித்து விடு என்று அது அவன் மனதைத் தூண்டிற்று.

"கண்ணம்மா! நீ ரொம்பக் கெட்டிக்காரி என்று பீத்திக் கொள்கிருயே! இது என்ன சொல்லு?" என்று தன் கையிலிருந்ததை அவளிடம் நீட்டிஞன். அதை வாங்கித் தடவிப் பார்த்துக் கொண்டே கண்ணம்மா சொன்ஞள்.

"இது வந்து காது."

"ஹூம்."

"இது வந்து தலை"

"ஹூம்."

"இது வந்து வால்...ஹூம்...இதோ சொல்கிறேன் தும்பிச்சுக்கை. இது தந்தம். இதுவந்து யானையாடா?"

"நீயே சொல்லு."

"இல்லை போலிருக்கு. யானைக்குப் பின் பக்கம் முதுகு கால் ஒண்ணுமிருக்காதோ?...எனக்குத் தெரியவில்லை யேடா?"

"இப்பொழுது யார் களிமண்?"

"இனிமேல் உன்னை அப்படி வையவில்லையடா."

"நான் சொல்லவே மாட்டேன். புத்திசாலிக் கொக்கோ இல்லையோ! நீயே தெரிஞ்சுகொள்."

அவன் பேச்சில் வெற்றியின் அகம்பாவம் பொங்கி வழிந்தது. தன்னைப் பழிவாங்கும் பேச்சு அது என்று

உணர்ந்ததும், அவள் கர்வம் தலைக்கேறிற்று. கண் இல்லாதது கடவுள் குற்றமென்றும், அவமானப்பட வேண்டியதல்ல வென்றும், மூளை இல்லாதது மனிதன் பிசகென்றும், வெட்கப்பட வேண்டியதென்றும் அவள் கருதியதால், இன்னதென்று தெரியாவிட்டால் குடிமுழுகி விடாது என்று நினைத்து மௌனமானாள்.

இந்த மௌனத்தையும், அவள் தோல்வியின் அறிகுறியாகப் பாவித்துவிட்டு, "நீ சாப்பிட்டாகி விட்டதா?" என்று வேறு விஷயத்தைப் பிரஸ்தாபித்தான் சோமு.

பின்னும் மௌனம் சாதித்தாலும், கோபமாய் பேசினாலும், தான் தோற்றுவிட்டதாகும் என்று பயந்து "இன்னும் சாப்பிடவில்லை. ரொம்பப் பசிக்கிறது" என்றாள் கண்ணம்மா.

"ஏன்?"

"பாட்டி இன்னும் வரவில்லை. எனக்குப் பசிக்கிறது."

"அப்படியானால் வா, நான் எடுத்துப் போடுகிறேன்."

இருவரும் திண்ணையிலிருந்து வீட்டிற்குள் சென்றார்கள்.

'அடே! பாட்டி இதோ படுத்துக்கொண்டிருக்கிறாளே! பாட்டி! பசிக்கிறது."

பாட்டி பதில் பேசவில்லை.

"ஏண்டி கண்ணம்மா, நான் கேட்டபோது வரவில்லையென்று சொன்னாயே!"

'நான் அவள் வந்ததைக் கவனிக்கவில்லை போலிருக்கிறது. இத்தனைக்கும் திண்ணையிலேதான் உட்கார்ந்திருந்தேன்."

"ஒருவேளை இன்னிக்கு வேலை செய்ய அவர்கள் வீட்டுக்குப் போகவே இல்லையோ, என்னவோ...பாட்டி!"

பாட்டி பதில் பேசவில்லை. அவள் கூடத்தில் படுத்திருந்த மாதிரி சோமுவுக்குத் திருப்திகரமாயில்லை. உள்ளே போய் பார்த்தான். சமையல் செய்யப்படவே இல்லை! எனவே, தான் ஊகித்தபடி அன்று பாட்டி வெளியே சமையல் செய்யப் போகவில்லை என்பது ஊர்ஜிதமாயிற்று. திரும்பவும் பாட்டியைப் பார்த்தான். அவள்மீது ஈக்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

"கண்ணம்மா, பாட்டிக்கு உடம்பு சரிப்படவில்லை போலிருக்கிறது. சமைக்கக்கூட இல்லை. நான் சொல்லுகிறபடி கேட்கிறாயா?"

"கேட்கிறேன்."

சோமு அவளை எதிர் வீட்டுக் கழைத்துக்கொண்டு போய், பாட்டிக்கு உடம்பு சரியில்லையென்று சொல்லி, கண்ணம்மாவுக்கு சாப்பாடு போடும்படி கேட்டான். அப்பொழுது அவளுக்கு யானையைப் பற்றி சொன்னான். ஏனென்றால் இவ்வளவு விஷயங்களுக்கிடையிலும் இருவர் மனத்திலும் அந்தத் தகராறைப் பற்றிய எண்ணம் இருந்து கொண்டேயிருந்தது.

"நான் கொண்டுவந்ததென்ன தெரியுமா? மடத்து வாசலில் தோரணம் கட்டுவதற்காக, மரத்தால் முன்பாதி மண்டியிட்ட யானை மாதிரியும், பின் பாதி பிறையில் சொருகுவதற்குக் கட்டைமாதிரியும் செய்து வைத்திருக்கிறார்கள். பார்!"

"ஆமாம்."

"அந்த மாதிரி இது சின்னதாக ஒன்று. ஒருத்தர் கொடுத்தார்."

"அதுதான் எனக்குப் புரியவில்லை. கண் இருந்தால் சட்டென்று தெரியும்."

"மூளை இருந்தால் நெட்டுரு ஆகும். களிமண் என்று நீ வையலாமா ?"

அங்கே அவள் சாப்பாடு முடிந்தது. அந்த வீட்டு மாமாவைப் பார்த்து, "கொஞ்சம் வந்து பாருங்களேன். பாட்டிக்கு உடம்பு சரியாயில்லை" என்றான் சோமு. எதிர்த்த வீட்டுக்காரர் வந்து பாட்டியைப் பார்த்தபொழுதுதான் விஷயம் விளங்கிற்று. விளக்கு மலையேறிவிட்டது. குழந்தைகளுக்கு விஷயம் அறிவிக்கப்பட்டவுடன் முதல்பேச்சு என்ன தெரியுமா ?"

"ஏண்டா சோமு ! இனிமேல் நீதானா எனக்குச் சாதம் போட்டுக் காப்பாத்த வேண்டும் ?"

"ஆமாம்."

"நீ அன்று மாட்டேன் என்று பயமுறுத்தினாயே ?"

"அன்று பாட்டி இருந்தாள். இன்றைக்கு..."